செய்தி வெளியீடு எண் : 014 நாள்:03.01.2022

**செய்தி வெளியீடு**

- **பதிவுத்துறை ரூ.10,000 கோடி வருவாயை விரைவில் ஈட்ட உள்ளது**
- **டிசம்பர் 2020 மாத வருவாய் ரூ.1303.31 கோடி. டிசம்பர் 2021 மாத வருவாய் ரூ.1405.99 கோடி.**
- **டிசம்பர் 2020 வரையிலான வருவாய் ரூ.6881.15 கோடி. டிசம்பர் 2021 வரையிலான வருவாய் ரூ.9854.41 கோடி. (ரூ.2,973.26 கோடி அதிகம்)**
- **டிசம்பர் 2019 வரையிலான வருவாய் ரூ.8267.84 கோடி. இதனைவிட டிசம்பர் 2021 வருவாயானது ரூ.1586 கோடி அதிகமாகும்**

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் பணி சீராய்வு கூட்டம் 3.1.2022 அன்று மாலை 3.00 மணியளவில் பதிவுத்துறைதலைவர் அலுவலகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மாண்புமிகு P. மூர்த்தி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு.ம.ப.சிவன் அருள், இ.ஆ.ப., கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், பதிவுத்துறை தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் உதவிப்பதிவுத்துறை தலைவர்கள் பதிவுத்துறை தலைவர் அலுவலகம், மற்றும் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்னும் ஒரு சில தினங்களில் ரூ.10,000 கோடி என்ற வருவாய் இலக்கினை பதிவுத்துறை அடையவுள்ளது. இன்றைய நிலையில் டிசம்பர் 2021 மாதத்தில் வருவாய் ரூ.1405.99 கோடி ஈட்டப்பட்டுள்ளது என்றும் இது சென்ற நிதியாண்டில் டிசம்பர் 2020 மாத வருவாயை காட்டிலும் ரூ.63.04 கோடி அதிகமாகும் என்றும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

2021–22 நிதியாண்டில் டிசம்பர் 2021 முடிய வருவாய் ரூ.9854.41 கோடி ஈட்டப்பட்டுள்ளது.

2017 முதல் 2021 முடிய டிசம்பர் மாதம் மட்டும் மற்றும் டிசம்பர் மாதம் முடிய உள்ள வருவாய் ஒப்பீடு

| டிசம்பர் 2017 | | டிசம்பர் 2018 | | டிசம்பர் 2019 | | டிசம்பர் 2020 | | டிசம்பர் 2021 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய |
| (ரூ.கோடியில்) | | | | | | | | | |
| 848.05 | 6618.93 | 948.21 | 8137.10 | 1000.15 | 8267.84 | 1303.31 | 6881.15 | 1405.99 | 9854.41 |

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரும் தங்களுக்கு அனுப்பப்படும் குறைவு முத்திரைத் தீர்வைக்கான முன்மொழிவுகள் மீது உரிய களப்பணி மேற்கொண்டு நியாயமான முறையில் சட்டப்பூர்வமாக செயல்பட்டு உரிய மதிப்பினை உடனுக்குடன் வழங்க வேண்டுமெனவும், தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்பதை உணர்ந்து உடனுக்குடன் தீர்வு காணப்படவேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார். மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அனைவரும் எவ்வித புகாருக்கும் இடமின்றி நடந்து கொள்ள வேண்டும் எனவும், வெளிப்படைத் தன்மையை பேணவேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அரசின் வருவாயை எவ்வித கசிவுமின்றி வசூலிக்க முழு கவனம் செலுத்த அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். இந்திய முத்திரைச்சட்டப் பிரிவு 47(A)(1) மற்றும் 47(A)(3)ன்கீழான நிலுவை ஆவணங்களுக்கு உரிய மதிப்பீடுகளை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் மதிப்பு நிர்ணயம் செய்து அரசுக்கு வர வேண்டிய வருவாயினை தாமதமின்றி வசூலிக்க வேண்டுமென அரசு செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது.

வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட வேண்டி நிலுவையில் உள்ள இனங்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு அரசுக்கு வரவேண்டிய வருவாயினை விரைவாக வசூலித்து சீரிய முறையில் பணியாற்றவும், பதிவுத்துறையின் வருவாய் இலக்கான ரூ.15,000 கோடியினை அடைந்திடவும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**